*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*29 03 2026 SUNDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

*1. மேற்காசியாவில் நிலவி வரும் பதற்றம் காரணமாக எரிசக்தி துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கடந்து செல்ல வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.*

*2. இந்தியா மற்றும் கேமரூன் இடையேயான பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகள் மேம்படுத்தப்படும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.*

*3. மேற்குவங்கத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த செயல்முறையின் கீழ், மூன்றாவது துணை வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.*

*4. ஈரானுக்கு எதிராக நடைபெற்று வரும் போர்ச் சூழலில், அமெரிக்காவின் 3 ஆயிரத்து 500 கடற்படை வீரர்கள் மத்திய கிழக்கு பகுதிக்கு விரைந்துள்ளனர்.*

*5. துனிஷியாவில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மனுஷ் ஷா – தியா சிட்டாலே இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.*

*>>>>>>>><<<<<<<<*

*மேற்காசியாவில் நிலவும் போர் சூழல் காரணமாக எரிசக்தி துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கடந்து செல்ல வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.*

*அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், போர் நடைபெற்று வரும் பகுதி, நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்து வரும் மிகப் பெரிய மையம் என்று கூறினார்.*

*இந்த போர் காரணமாக, எரிசக்தி துறையில் உலகம் முழுவதும் சிக்கலான சூழல் நிலவி வருவதாக அவர் தெரிவித்தார்.*

*140 கோடி மக்களின் வல்லமையால் கோவிட்-19 காலத்தை கடந்து வந்தோம், அதுபோல, இந்த சவாலான காலகட்டத்திலிருந்து நாம் வெளியேற வேண்டும் என்றும், அதற்கு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.*

*(சவுண்ட் பைட் – பிரதமர் (1) 54 செகண்ட்ஸ்)*

*நாட்டின் கலாச்சாரம் மற்றும் வளமையான மரபை ஒன்றுபடுத்தும் முயற்சியாக ஞானபாரதம்-ஆய்வு என்ற திட்டத்தின் கீழ், ஞானபாரதம் செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும், மக்கள் அனைவரும் தங்களிடம் உள்ள கலாச்சாரம் மற்றும் மரபுகளை பிரதிபலிக்கும் கையெழுத்துப் பிரதிகளை இந்த செயலியில் பதிவேற்றம் செய்யலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*நாட்டின் கட்டமைப்பிற்கு இளையோர் மிகப் பெரிய பங்களித்து வருவதாகவும், அவர்களின் எண்ணங்கள் மிகச் சிறந்ததாக உள்ளது என்றும், அவர்களின் ஆலோசனைகள் வரவேற்கத்தக்கதாக உள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 38 செகண்ட்ஸ்)*

மக்கள் அனைவரும் உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவர், சர்வதேச யோகா தினம் இன்னும் ஒரு சில மாதங்களில் கொண்டாடப்படவுள்ள நிலையில், யோகா கலை மீதான ஆர்வம் உலகம் முழுவதும் எழுச்சியடைந்துள்ளதாக தெரிவித்தார்.

உணவில் சர்க்கரை அளவு மற்றும் சமையல் எண்ணெய் பயன்பாடு ஆகியவற்றை குறைத்துக் கொண்டு, மக்கள் உடல்நலத்தை பேண வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

அறிவியல் கல்வியை மாணவர்களிடம் கொண்டு செல்வதற்கு எளிமையான வழிமுறைகளின் மூலம், புதுமையாக கற்பிக்கும் திறனை பெங்களூருவில் உள்ள கல்வி ஆய்வு நிறுவனம் மேற்கொண்டு வருவதாகவும், இதன் மூலம் எதிர்காலத்தில் நமக்கு இளைய விஞ்ஞானிகள் அதிகம் கிடைப்பார்கள் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

*(சவுண்ட் பைட் – பிரதமர் (3) 39 செகண்ட்ஸ்)*

கோடை காலம் ஆரம்பித்துள்ள நிலையில், மக்கள் அனைவரும் நீர் சேமிப்பு குறித்து சிந்திக்க வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் (4) 45 செகண்ட்ஸ்)*

நாம் மேற்கொள்ளும் சிறு சிறு முயற்சிகள் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருவதாக கூறிய அவர், உத்தரபிரதேசத்தின் வாரணாசியில் ஒரு மணி நேரத்தில் 2 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான மரக்கன்றுகள் நடப்பட்டு, உலக சாதனை படைக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

பிரதமரின் சூரியசக்தி வீடுகளுக்கான மின்சார திட்டத்தால், வடகிழக்கு மாநிலங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாக கூறிய திரு. நரேந்திர மோடி, திரிபுராவின் ரியாங் பழங்குடியினர் தற்போது இந்த மின்சாரத்தை பயன்படுத்துவதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளதாக தெரிவித்தார்.

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

>>>>>>><<<<<<<

இந்தியா மற்றும் கேமரூன் இடையேயான பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகள் மேம்படுத்தப்படும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

கேமரூன் நாட்டில் நடைபெற்று வரும் உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டின் ஒரு பகுதியாக இந்திய வம்சாவளியினர் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

கேமரூனில் வாழும் இந்திய வம்சாவளியினர் இருநாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவதிலும், நட்புறவை வளர்ப்பதிலும் பாலமாக திகழ்வதாக திரு. பியூஷ் கோயல் தமது சமூகவலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

மேற்குவங்கத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த செயல்முறையின் கீழ், மூன்றாவது துணை வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

மாநிலத்தின் வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் தொடர்ச்சியான நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இந்த வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த பிப்பிரவரி மாதம் 28ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் சில திருத்தங்கள் செய்யப்பட்டு வருவதாகவும், துணைப் பட்டியல்களை தினசரி அடிப்படையில் வெளியிடுவதற்கு நீதிமன்றத்தின் அனுமதியை நாடியுள்ளதாகவும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்ட வாக்காளர்கள், அதற்கான தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

ஈரானுக்கு எதிராக நடைபெற்று வரும் போர்ச் சூழலில், அமெரிக்காவின் 3 ஆயிரத்து 500 கடற்படை வீரர்கள் மத்திய கிழக்கு பகுதிக்கு விரைந்துள்ளனர்.

இவர்கள், அமெரிக்காவின் போர்க்கப்பலான *Tripoli* மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஒரு பக்கம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரமப் தெரிவித்து வரும் நிலையில், கூடுதல் படை வீரர்கள் மத்திய கிழக்கு ஆசியாவில் குவிக்கப்பட்டு வருகின்றன. மேலும், 10 ஆயிரம் அமெரிக்க படை வீரர்கள் அங்கு முகாமிடவிருப்பதாக பெண்டகன் கூறியுள்ளது.

ஈரானின் முக்கிய தலங்களை தாக்கும் விதத்தில் இந்த படைவீரர்கள் நிறுத்தப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>>><<<<<<<

அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா-வின் நிலவை சுற்றி வரும் *Artimis-II* திட்டத்திற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட 4 விண்வெளி வீரர்கள், கென்னடி விண்வெளி நிலையத்திற்கு வந்துள்ளனர்.

இந்த விண்வெளிப் பயணத்தை ஏப்ரல் 1-ஆம் தேதி இந்த விண்வெளி நிலையத்திலிருந்து அவர்கள் மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

விண்வெளி வீரர்களான அமெரிக்காவின் ரீட் வைஸ்மேன், விக்டர் க்ளோவர், கிறிஸ்டினா கோக் மற்றும் கனடாவின் ஜெர்மி ஹான்ஸன் ஆகியோர் சுமார் 10 நாட்கள் விண்வெளியில் பயணம் செய்யவுள்ளனர்.

விண்வெளிக்கு மனிதர்களை ஏற்றிச் செல்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஓரியன் விண்கலத்தில் அவர்கள் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு, நிலவை நோக்கி மனிதர்கள் மேற்கொள்ளும் முதல் பயணத்திற்கான இறுதிகட்ட முயற்சிகளில் நாசா தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

யுக்ரைன் அதிபர் திரு. *Volodymyr Zelenskyy* கத்தார் நாட்டின் தலைவர் திரு. *Tamim bin Hamad Al Thani*-யை சந்தித்து இருநாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா வான்வெளி அமைப்புகளை ஏற்படுத்துவது குறித்த ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் இருவரும் கைழுத்திட்டனர்.

மேலும், சர்வதேச பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள மோசமான விளைவுகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

>>>>>>><<<<<<<<

துனிஷியாவில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மனுஷ் ஷா – தியா சிட்டாலே இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>>><<<<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், மும்பை அணி இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது. மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி *7.30*-க்கு தொடங்குகிறது.

*>>>>>>>END<<<<<<<<*